பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

18 04 2024 12 40

வியாழக்கிழமை நண்பகல்

<u>தலைப்புச் செய்திகள்-</u>

1. தமிழகம், புதுச்சேரி உட்பட நாடு முழுவதும் 102 மக்களவைத் தொகுதிகளில் நாளை முதல்கட்ட வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

2. மக்களவைத் தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

3. தமிழகத்தில் வாக்குப்பதிவையொட்டி ஒரு லட்சத்திற்கும் கூடுதலாக காவல்துறை மற்றும் துணை ராணுவப் படையினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக தலைமை தேர்தல் அதிகாரி திரு சத்யபிரதா சாஹூ கூறியுள்ளார்.

4. மக்களவைக்கு நான்காவது கட்ட தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்று தொடங்கியது.

5. ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் பஞ்சாப் - மும்பை அணிகள் மோதுகின்றன.

*<u>---- இனி விரிவான செய்திகள் ---</u>*

**[]<<<>>>[]**

தமிழகம், புதுச்சேரி உட்பட நாடு முழுவதும் நாளை முதல்கட்ட தேர்தல் நடைபெறவுள்ள மக்களவைத் தொகுதிகளில் வாக்குப்பதிவுக்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

வாக்குப்பதிவு நாளை காலை ஏழு மணிக்கு தொடங்கி மாலை ஆறு மணி வரை நடைபெறுகிறது.

வாக்குச்சாவடிகளில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

பதற்றமான வாக்குச்சாவடிகள் என கண்டறியப்பட்டுள்ள மையங்களில் கூடுதல் பாதுகாப்பு போடப்பட்டுள்ளதுடன், கண்காணிப்பு கேமராக்களும் பொருத்தப்பட்டுள்ளன.

வாக்காளர்களுக்குத் தேவையான குடிநீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதை தேர்தல் அலுவலர்கள் உறுதி செய்து வருகின்றனர்.

17 மாநிலங்கள் மற்றும் நான்கு யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த 102 தொகுதிகளில் நாளை வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

தமிழகத்தில் 39 தொகுதிகள், ராஜஸ்தானில் 12, அருணாச்சலப் பிரதேசம், மணிப்பூர் மற்றும் மேகாலயாவில் தலா 2 தொகுதிகள், உத்ராகண்ட், அஸ்ஸாம் மற்றும் மகாராஷ்ட்ராவில் தலா 5 தொகுதிகள், பீகாரில் நான்கு தொகுதிகள், மத்தியப்பிரதேசத்தில் ஆறு தொகுதிகள், மேற்குவங்கத்தில் மூன்று தொகுதிகளில் நாளை தேர்தல் நடைபெறுகிறது.,

சத்திஷ்கர், மிஸோராம், நாகாலாந்து, சிக்கிம், திரிபுரா, அந்தமான் நிகோபார், ஜம்மு காஷ்மீரில் தலா ஒரு தொகுதிக்கும், லட்சத்தீவு மற்றும் புதுச்சேரியில் தலா ஒரு தொகுதியிலும் வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

தமிழகத்தில் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள விளவங்கோடு சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தலுக்கான வாக்குப்பதிவும் நாளை நடைபெறுகிறது.

தமிழகத்திலும் வாக்குப்பதிவுக்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் இருப்பதாக தலைமை தேர்தல் அதிகாரி திரு சத்யபிரதா சாஹூ தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

*( சவுண்ட்பைட் - சத்தியபிதாசாஹூ ) ----- செகண்ட்*

தமிழகத்தில் 39 மக்களவைத் தொகுதிகளுக்கான வாக்குப்பதிவும், விளவங்கோடு சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தலுக்கான வாக்குப்பதிவும் நாளை காலை எழு மணிக்கு தொடங்கி மாலை ஆறு மணி வரை நடைபெறும் என்று திரு சத்யபிரதா சாஹூ கூறியுள்ளார்.

நாளை வேட்பாளரின் சொந்த பயன்பாட்டிற்கு ஒரு வாகனம் உள்ளிட்ட மூன்று வாகனங்களை மட்டும் பயன்படுத்துவதற்கு தேர்தல் நடத்தும் அதிகாரியிடம் அனுமதிபெற வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இரண்டு நபர்களை மட்டுமே கொண்ட அரசியல் கட்சிகளின் தற்காலிக அலுவலகம் வாக்குச்சாவடியிலிருந்து 200 மீட்டர் தொலைவில் அமைக்கப்படலாம் என்றும், அங்கு தேவையில்லாத கூட்டத்தை அனுமதிக்கக்கூடாது என்றும் தலைமை தேர்தல் அதிகாரி கூறியுள்ளார்.

இதனிடையே தமிழகத்தில் மாவட்ட தேர்தல் அதிகாரிகள் தேர்தல் பார்வையாளர்கள் கண்காணிப்பில் வாக்குச்சாவடிகளுக்கு மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்களை எடுத்தும் செல்லும் பணி முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நாமக்கல் மாவட்டத்தில் மலைப்பாங்கான பகுதிகளில் உள்ள வாக்குச்வாடிகளுக்கு மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள் தலைசுமையாக எடுத்துச் செல்லப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*( வாய்ஸ்பைட் - கண்ணன் ) —45 செகண்ட்*

வெய்யிலின் தாக்கம் அதிகமாக இருப்பதால் வாக்குச்சாவடிகளில் வாக்காளர்களுக்கு குடிநீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் செய்யப்பட்டுள்ளதை தேர்தல் அலுவலர்கள் உறுதி செய்து வருவதாக எமது செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மக்கள் அச்சமின்றி வாக்களிக்க ஏதுவாக காவல்துறையினர் மற்றும் பாதுகாப்புப் படையினர் அணிவகுப்புகளை நடத்தி வருகின்றனர்.

நெல்லை தொகுதியில் இன்று இந்த அணிவகுப்பு நடைபெற்றதாக எமது செய்தியளர் தெரிவிக்கிறார்.

*( வாய்ஸ்பைட் - திருமலை ) ---45 செகண்ட்*

**[]<<<>>>[]**

மக்களவைத் தேர்தலில் நான்கு கட்ட வாக்குப்பதிவுக்கான வேட்புமனு தாக்கல் இன்று தொடங்கியது.

இதற்கான அறிவிக்கையை தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ளது.

ஒன்பது மாநிலங்கள் மற்றும் ஒரு யூனியன் பிரதேசத்தில் உள்ள 96 தொகுதிகளில் அடுத்த மாதம் 13-ம் தேதி வாக்குப் பதிவு நடைபெறவுள்ளது.

ஆந்திராவில் 25, தெலங்கானாவில் 17, உத்தரபிரதேசத்தில் 13, மகாராஷ்டிராவில் 11, மத்தியப் பிரதேசம் மற்றும் மேற்கு வங்கத்தில் தலா 8 தொகுதிகள், பீகாரில் 5 தொகுதிகள், ஜார்க்கண்ட் மற்றும் ஒடிசாவில் தலா 4 தொகுதிகள், ஜம்மு காஷ்மீரில் ஒரு தொகுதிக்கு நான்காவது கட்டமாக தேர்தல் நடைபெறவுள்ளது.

இந்த தொகுதிகளில் வேட்புமனுக்களை தாக்கல் செய்ய வரும் 25-ஆம் தேதி கடைசி நாளாகும்.

வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை அதற்கு அடுத்த நாள் நடைபெறுகிறது.

மனுக்களை திரும்பப் பெற வரும் 29-ஆம் தேதி கடைசி நாளாகும்.

ஆந்திர மாநிலத்தில் மொத்தம் உள்ள 175 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கும் ஒரே கட்டமாக வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

ஒடிசாவில் முதல் கட்டமாக 28 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கும் தேர்தல் நடைபெறுகிறது.

இதற்கிடையே மூன்றாவது கட்டமாக அடுத்த மாதம் ஏழாம் தேதி தேர்தல் நடைபெறவுள்ள தொகுதிகளில் வேட்புமனு தாக்கல் நாளை நிறைவடைகிறது.

பத்து மாநிலங்கள் மற்றும் இரண்டு யூனியன் பிரதேசங்களில் உள்ள 94 தொகுதிகளில் மூன்றாவது கட்ட வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.,

குஜராத்தில் 26, கர்நாடகாவில் 14. மகாராஷ்ட்ராவில் 11, உத்தரபிரதேசத்தில் 10, மத்தியப்பிரதேசத்தில் 8, சத்திஷ்கரில் 7, பீகாரில் ஐந்து, அஸ்ஸாம் மற்றும் மேற்குவங்கத்தில் தலா நான்கு, தொகுதிகளுக்கும் மூன்றாவது கட்ட தேர்தல் நடைபெறுகிறது.

கோவா-வில் இரண்டு தொகுதிகளுக்கும், தாத்ரா-நாகர்ஹவேலி, டாமன் அண்ட் டையூ மற்றும் ஜம்மு காஷ்மீரில் தலா ஒரு தொகுதியிலும் அடுத்த மாதம் ஏழாம் தேதி வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

**[]<<<>>>[]**

மின்னனு வாக்குப்பதிவு எந்திரங்களில் யாருக்கு வாக்களித்தோம் என்பதை அறிந்து கொள்ளும் ஒப்புகை சீட்டுகளை 100 சதவீதம் சரிபார்க்க வேண்டுமென்று கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணை இன்றும் உச்சநீதிமன்றத்தில் நடைபெறுகிறது.

இந்த வழக்கு நீதிபதிகள் திரு சஞ்ஜீவ் கன்னா, திரு தீபங்கர் தத்தா அடங்கிய அமர்வுமுன் விசாரணைக்கு வந்தது.

இது தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட மனுவிற்கு பதிலளித்துள்ள தேர்தல் ஆணையம், யாருக்கு வாக்களித்தோம் என்பதை 100 சதவீதம் சரிபார்ப்பதற்கு நடைமுறை சிக்கல்கள் உள்ளதாக நீதிமன்றத்தில் தெரிவித்திருந்தது.

இதற்கிடையே மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்களில் பதிவான வாக்குகளை ஒப்புகைச்சீட்டு எந்திரத்துடன் ஒப்பீட்டு சரிபார்ப்பதை கட்டாயமாக்கும்படி தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிடக்கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொள்ள சென்னை உயர்நீதிமன்றம் மறுத்துவிட்டது.

**[]<<<>>>[]**

மக்களவைத் தேர்தலில் பிஜேபி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களின் 13-வது பட்டியலை இன்று அக்கட்சி வெளியிட்டுள்ளது.,

மத்திய அமைச்சர் திரு நாராயண் ராணே மகாராஷ்டிரா மாநிலம் ரத்னகிரி சிந்துதுர்க் தொகுதியில் போட்டியிடுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் பஞ்சாப் அணி – மும்பை அணியை எதிர்கொள்கிறது.

மொஹாலியில் இப்போட்டி இரவு மணி 7-30-க்கு தொடங்குகிறது.

**[]<<<>>>[]**

மெக்ஸிகோ சர்வதேச சாலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அனிருத் சந்திரசேகர் - மெக்ஸிகோவின் **Hach verdugo** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

***End of News***